புதுச்சேரி மாநில தலைமை அலுவலகம்
38, Main Road, Oulgreat, Near KFC Moolakulam, Puducherry-605009,
Cell: 97505 89992,9629620802

PRGI.NO.TNTAM/25/A1635 T/TN/2026/0316/6130/1505

# நீதிகதிர் எக்ஸ்பிரஸ்

NEETHIKATHIR EXPRESS
மறைக்கப்பட்ட செய்திகள் திறக்கப்படும்
காலை நாளிதழ்

நீதி கதிர் எக்ஸ்பிரஸ் சென்னை அலுவலகம்.
No.19\10 1st Floor F1 ,7th Street, Nehru Colony, Nanganallur, Chennai - 600061
Cell: 7810068421,9488420449
neethiPress@ gmail.com

மலர்: 01 | இதழ்: 262 | 28-03-2026 | சனி | பக்கம்- 4 | விலை- ரூ.5 | திருச்சி- புதுச்சேரி
Volum 01 | Issue: 262 | 28-03-2026 | Saturday | Pages - 4 | Price- Rs. 5 | Trichy-Puducherry

## லாக் டவுன் பற்றி வெளியாகும் தகவல்கள் முற்றிலும் பொய்: மத்திய அரசு விளக்கம்

புதுடெல்லி: மார்ச்.28–
இந்தியாவில் பொது முடக்கம் தொடர்பாக வெளியாகும் தகவல்கள் முற்றிலும் பொய்யானவை என்றும் அப்படி எந்த ஒரு திட்டமும் அரசின் பரிசீலனையில் இல்லை என்றும் மத்திய அமைச்சர் ஹர்தீப் சிங் பூரி தெரிவித்துள்ளார்.

ஈரான் போர் காரணமாக எரிபொருட்களுக்கான பற்றாக்குறை அதிகரித்து, கோவிட் பெருந்தொற்று காலத்தில் ஏற்பட்டது போன்ற ஒரு பொதுமுடக்கம் மீண்டும் ஏற்பட இருப்பதாக சமூக ஊடகங்களில் வதந்திகள் பரப்பப்படும் நிலையில், மத்திய அரசு அதனை திட்டவட்டமாக மறுத்துள்ளது.

இது தொடர்பாக மத்திய பெட்ரோலியத் துறை அமைச்சர் ஹர்தீப் சிங் பூரி வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில், "உலகளாவிய நிலைமை தொடர்ந்து நிலையற்றதாகவே உள்ளது. எனவே, எரிசக்தி, விநியோகச் சங்கிலிகள், அத்தியாவசியப் பொருட்கள் தொடர்பான கள நிலவரங்களை மத்திய அரசு உன்னிப்பாக கண்காணித்து வருகிறது.

பிரதமர் மோடி தலைமையிலான நமது அரசு, குடிமக்களுக்கு எரிபொருள், எரிசக்தி, பிற அத்தியாவசியப் பொருட்கள் தடையின்றி கிடைப்பதை உறுதி செய்ய தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது. சவால்களை சமாளிக்க நாங்கள் முழு அளவில் தயாராக இருக்கிறோம்.

உலகளாவிய நிச்சயமற்ற தன்மைகளை எதிர்கொள்வதில் இந்தியா தனது திறனை தொடர்ந்து வெளிப்படுத்தி உள்ளது. மேலும், நாங்கள் சரியான நேரத்தில், திட்டமிட்ட முறையில் ஒருங்கிணைந்து செயல்படுவோம்.

இந்தியாவில் பொதுமுடக்கம் குறித்த வதந்திகள் முற்றிலும் பொய்யானவை. இதை நான் தெளிவாகக் கூறுகிறேன். இந்திய அரசாங்கத்திடம் அத்தகைய எந்தவொரு திட்டமும் பரிசீலனையில் இல்லை. இதுபோன்ற காலங்களில் நாம் அமைதியாகவும், பொறுப்புடனும், ஒற்றுமையுடனும் இருப்பது முக்கியம். வதந்திகளைப் பரப்பி பீதியை உருவாக்கும் முயற்சிகள் பொறுப்பற்றவை மற்றும் தீங்கு விளைவிப்பவை" என்று தெரிவித்துள்ளார்.

முன்னதாக நாடாளுமன்றத்தில் பேசிய பிரதமர் மோடி, "மேற்காசிய போர் காரணமாக சவாலான உலகளாவிய நிலைமை நீண்ட காலம் நீடிக்கக்கூடும். எனவே நாம், கோவிட் காலத்தை எதிர்கொண்டதுபோல் சவாலான சூழலை எதிர்கொள்ள ஒற்றுமையுடன் தயாராக இருக்க வேண்டும்" என்று கூறியிருந்தார். இதன் பின்னர்தான் நாட்டில் எல்பிஜி சிலிண்டர் விநியோகத்தில் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதை கருத்தில் கொண்டு நாடு தழுவிய பொதுமுடக்கம் (லாக்டவுன்) அறிவிக்கப்படலாம் என்ற வதந்திகள் எழுந்தன.

இந்நிலையில், மத்திய அமைச்சர் ஹர்தீப் சிங் பூரி, அதில் எவ்வித உண்மையும் இல்லை என உறுதிப்படுத்தி உள்ளார். இந்தியா வசம் 2 மாதங்களுக்குத் தேவையான எரிபொருள் கைவசம் இருப்பதாகவும், எனவே பெட்ரோல், டீசலுக்கு தட்டுப்பாடு ஏற்படுமோ என்ற அச்சம் தேவையற்றது என்று மத்திய பெட்ரோலியம் அமைச்சகமும் நேற்று கூறி இருந்தது குறிப்பிடத்தக்கது.

## வெளி மாவட்டத்தில் தேர்தல் பணி ஒதுக்கியதால் ஆசிரியர்கள் அதிர்ச்சி!

தென்காசி: மார்ச்.28–
தமிழக சட்டப் பேரவை தேர்தல் ஏப்.23 ம் தேதி நடைபெற உள்ள நிலையில், கோவில்பட்டி வட்டத்துக்கு உட்பட்ட பிள்ளையார்நத்தம், இளையரசனேந்தல் ஆகிய கிராமங்களில் உள்ள பள்ளிகளைச் சேர்ந்த 40 ஆசிரியர்களுக்கு தென்காசி மாவட்டத்தில் தேர்தல் பணி ஒதுக்கீடு செய்யப்பட்டு ஆணை வழங்கப்பட்டுள்ளது.

இவர்களுக்கான முதல் கட்ட பயிற்சி முகாம் சங்கரன் கோவில் கோமதி அம்பாள் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் இன்று (28ம் தேதி) நடைபெற உள்ளது. வெளி மாவட்டங்களில் உள்ள தொகுதிகளில் பணி ஒதுக்கீடு பெற்றுள்ள ஆசிரியை கள் 3 கட்ட பயிற்சி வகுப்புகளுக்கு சம்பந்தப்பட்ட பள்ளிகளுக்கு செல்ல வேண்டும்.

தொடர்ந்து ஏப்.22, 23ம் தேதி தேர்தல் பணி செய்ய வேண்டும். வாக்குப்பதிவு இயந்திரம் எடுத்துச் செல்லும் வரை மையத்தில் காத்திருக்க வேண்டும். நள்ளிரவு நேரம் வந்து வாக்குப் பதிவு இயந்திரங்களை எடுத்துச் சென்றால், அதன் பின்னர் ஆசிரியைகள் வீடு திரும்புவதில் சிக்கல் ஏற்படும். எனவே, சொந்த மாவட்டங்களிலேயே உள்ள தொகுதிகளில் தேர்தல் பணி ஒதுக்கீடு செய்ய வேண்டுமென கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது குறித்து முன்னாள் ராணுவவீரர் அ.ஜெயப் பிரகாஷ் நாராயணசாமி கூறியதாவது: கடந்த நாடாளுமன்றம் மற்றும் சட்டப் பேரவை தேர்தல்களில் ஆசிரியைகளுக்கு தூத்துக்குடி மாவட்ட வரம்புக் குள் தேர்தல் பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டு தேர்தல் பணி செய்தனர்.

தற்போது சட்டப் பேரவை தேர்தலில் பணி தென்காசி மாவட்ட வரம்புக்குள் இணைக்கப்பட்டு தேர்தல் பணி உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. தேர்தல் பணியில் ஈடுபடும் ஆசிரியைகள் பயிற்சிக்காக சுமார் 40 கி.மீ. அலைய வேண்டும்.

எனவே, இதற்கு முன்பு தேர்தல் பணி ஒதுக்கீடு செய்தபடியே இந்தாண்டும் தூத்துக்குடி மாவட்ட வரம்புக்குள் தேர்தல் பணி வழங்க உரிய ஆவண செய்ய வேண்டும். தென்காசி மாவட்டத்தில் வாக்குச் சாவடி தலைமை அலுவலர் பொறுப்பு பள்ளி தலைமை ஆசிரியர்கள், முதுகலை பட்டதாரி ஆசிரியர்கள் மற்றும் கல்லூரி பேராசிரியர்களுக்கு மட்டுமே வழங்கப்படும்.

ஆனால், இந்த தேர்தலில் தென்காசி மாவட்டத்தில் தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள், பட்டதாரி ஆசிரியர்கள், அரசு அலுவலக எழுத்தர்கள் உள்ளிட்டோருக்கு வாக்குச்சாவடி தலைமை அலுவலர் பொறுப்பு வழங்கப்பட் டுள்ளது. இதனை தென்காசி மாவட்ட தேர்தல் அதிகாரி விசாரித்து பணி ஒதுக்கீட்டை வரைமுறைப்படுத்த வேண்டும் என்றார்.

இதற்கிடையே, இந்திய பள்ளி ஆசிரியர் கூட்டமைப்பு மாவட்ட ஒருங்கிணைப்பாளர் மா.கலை உடையார் தூத்துக்குடி மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலருக்கு அனுப்பியுள்ள மனுவில்,, ''பிள்ளையார்நத்தம், இளையரசனேந்தல் அரசு மேல்நிலைப் பள்ளிகளைச் சேர்ந்த 40 ஆசிரியர்களுக்கு தென்காசி ஆட்சியரால் தேர்தல் பணி ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன.

மாவட்டம் விட்டு மாவட்டம் தேர்தல் பணியாற்றும் இந்த நிலை பள்ளி ஆசிரியர்களிடையே மிகுந்த அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. எனவே, தூத்துக்குடி மாவட்டத்துக்குள் தேர்தல் பணியாணை வழங்க வேண்டும், என தெரிவித்துள்ளார்.

## அனைத்து மாநிலங்களுக்கும் கூடுதலாக 20% வணிக சிலிண்டர்கள் ஒதுக்கீடு: மத்திய அரசு

டெல்லி: மார்ச்.28–
அனைத்து மாநிலங்களுக்கும் கூடுதலாக கூடுதலாக 20% வணிக சிலிண்டர்கள் ஒதுக்கீடு செய்யப்படும் என மத்திய அரசு தெரிவித்துள்ளது. ஈரான் போருக்கு முன்பிருந்த அளவில் 70% அளவுக்கு வணிக சிலிண்டர்கள் தற்போது விநியோகம் செய்யப்படுகிறது. தற்போது கூடுதலாக கிடைக்கும் சிலிண்டர்களை ஆட்டோமொபைல், டெக்ஸ்டைல் உள்ளிட்ட நிறுவனங்களுக்கு வழங்க அறிவுரை வழங்கியது.

மேலும் இதுகுறித்து பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சகச் செயலாளர் நீரஜ் மிட்டல் வெளியிட்டுள்ள அறிக்கையில்; "பல்வேறு துறைகளுக்கான வீட்டு உபயோகம் அல்லாத எல்.பி.ஜி ஒதுக்கீடு தொடர்பான முந்தைய கடிதங்களின் (கடித தேதிகள்: 16.03.26, 18.03.26 மற்றும் 21.03.26) தொடர்ச்சியாக இந்தக் கடிதம் அனுப்பப்படுகிறது. இதன் விளைவாக, மாநிலங்களுக்கு நெருக்கடிக்கு முந்தைய ஒதுக்கீட்டில் 40% வழங்கப்பட்டுள்ளது.

மேலும், குழாய் வழி இயற்கை எரிவாயுவை (PNநி) ஊக்குவிப்பதற்கான சில சீர்திருத்தங்களை மேற்கொண்டதன் அடிப்படையில் கூடுதலாக 10% ஒதுக்கீடு வழங்கப்பட்டது. பல மாநிலங்கள் இந்தச் சீர்திருத்தங்களை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ செயல்படுத்தி, அந்த 10% கூடுதல் ஒதுக்கீட்டைப் பெற்றுள்ளன என்பதைப் பகிர்ந்துகொள்வதில் மகிழ்ச்சியடைகிறேன்.

தற்போதுள்ள 50% ஒதுக்கீட்டுடன் கூடுதலாக 20% ஒதுக்கீடு வழங்க முன்மொழியப்பட்டுள்ளது. இதன் மூலம், வீட்டு உபயோகம் அல்லாத எல்.பி.ஜி சிலிண்டர்களின் மொத்த ஒதுக்கீடு, நெருக்கடிக்கு முந்தைய அளவில் 70% ஆக உயரும்.

இந்தக் கூடுதல் 20% ஒதுக்கீடு பின்வரும் நிபந்தனைகளுக்கு உட்பட்டது:

அதிக தொழிலாளர்களைக் கொண்ட மற்றும் பிற அத்தியாவசியத் துறைகளுக்கு ஆதரவளிக்கும் எஃகு, ஆட்டோமொபைல், ஜவுளி, சாயம், ரசாயனம் மற்றும் பிளாஸ்டிக் போன்ற தொழில் துறைகளுக்கு முன்னுரிமை அளித்து இந்தக் கூடுதல் ஒதுக்கீடு வழங்கப்படும். இவற்றுள், இயற்கை எரிவாயுவிற்கு (Natural Gas) மாற்றாகப் பயன்படுத்த முடியாத, சிறப்பு வெப்பமூட்டும் தேவைகளைக் கொண்ட அல்லது செயல்முறை சார்ந்த (Process industries) தொழில்களுக்கு முதன்மை முன்னுரிமை அளிக்கப்படும்.

கூடுதல் 20% ஒதுக்கீட்டைப் பெறுவதற்கு, 21 மார்ச் 2026 தேதியிட்ட கடிதத்தின் பத்தி (தீ)இல் குறிப்பிட்டுள்ளபடி எண்ணெய் நிறுவனங்களிடம் (OMCs) பதிவு செய்திருக்க வேண்டும் மற்றும் பத்தி (நீ)இல் குறிப்பிட்டுள்ளபடி சி.ஜி.டி (CGD) நிறுவனங்களிடம் பி.என்.ஜி (PNG)க்காக விண்ணப்பித்திருக்க வேண்டும். ஒருவேளை, இந்தப் பத்தியின் முதல் வரிசையில் குறிப்பிட்டுள்ள தொழில்துறைகளில், இயற்கை எரிவாயுவைப் பயன்படுத்த முடியாத சிறப்புத் தேவைகளுக்காக எல்.பி.ஜி பயன்படுத்தப்பட்டால், அந்த விண்ணப்ப நிபந்தனையிலிருந்து விலக்கு அளிக்கப்படும்.

இயற்கை எரிவாயு மற்றும் பெட்ரோலியப் பொருட்கள் விநியோக (குழாய்கள் மற்றும் பிற வசதிகள்) ஆணை 2026 ஐ அனைத்துத் துறைகளுக்கும் / அமைப்புகளுக்கும் தெரிவிக்குமாறு உங்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், சீர்திருத்த அடிப்படையிலான 10% ஒதுக்கீட்டை இதுவரை பெறாத மாநிலங்கள், அதனை உடனடியாகப் பயன்படுத் திக்கொள்ளுமாறு வலியுறுத்துகிறேன்.

இதன் மூலம், வணிக/ தொழில்துறை எல்.பி.ஜி ஒதுக்கீடு 70% ஆக உயர்ந்து (10% சீர்திருத்த அடிப்படையிலான ஒதுக்கீடு உட்பட), மாநிலத்தில் தொழில் செயல்பாடுகள் தடையின்றி நடைபெற வழிவகை செய்யும்" என தெரிவித்துள்ளார்.

## 800 கி.மீ தூரத்தை தாக்கும் புதிய வகை பிரமோஸ் ஏவுகணைகளை வாங்க இந்தியா ராணுவம் திட்டம்!!

டெல்லி: மார்ச்.28–
பிரமோஸ் ஏவுகணையின் தாக்குதல் வரம்பை 450 கி.மீ.லிருந்து 800 கி.மீ. ஆக உயர்த்தி, புதிய ஏவுகணைகளை வாங்க இந்திய ராணுவம் திட்டமிட்டுள்ளது. கடந்தாண்டு நடைபெற்ற இந்தியா பாகிஸ்தான் மோதலில் பிரமோஸ் சூப்பர்சோனிக் ஏவுகணைகள் பெரிதும் உதவியதாக கூறப்படுகிறது. இந்திய பாதுகாப்புத் துறையில் முக்கிய முன்னேற்றமாக, 800 கிலோமீட்டருக்கும் அதிக தூரத்தை தாக்கும் திறன் கொண்ட பிரமோஸ் சூப்பர்சோனிக் குரூஸ் ஏவுகணை வாங்க இந்தியா திட்டமிட்டுள்ளது.

இந்த ஏவுகணைகள் அதிவேகமாக (சூப்பர்சோனிக்) பாய்ந்து, நீண்ட தூர இலக்குகளை துல்லியமாக தாக்கும் திறன் கொண்டவை. இந்தியாவிடம் சுமார் 450 கி.மீ. வரை தாக்கும் ஏவுகணைகள் இருந்தாலும், பாதுகாப்பை மேலும் பலப்படுத்தும் நோக்கில் இந்த புதிய முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக தகவல் தெரிவிக்கப்பட்டது. மேற்காசியாவில் நிலவும் பதற்றமான சூழ்நிலை மற்றும் உலகளாவிய பாதுகாப்பு சவால்களை கருத்தில் கொண்டு, எதிர்காலத் தேவைகளை முன்னிட்டு இந்தியா இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளதாக தெரிகிறது. இந்த திட்டம் இந்திய ராணுவத்தின் தாக்குதல் திறனை மேலும் அதிகரிக்கும் என்றும், தேசிய பாதுகாப்பை வலுப்படுத்தும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

## பெரம்பலூர் மாவட்டத்தில் அனுமதியின்றி பிரச்சார வாகனங்கள், கூட்டங்கள் நடத்துபவர்கள் மீது நடவடிக்கை

### *கலெக்டர் மிருணாளினி எச்சரிக்கை

பெரம்பலூர் :மார்ச்.28–
பெரம்பலூர் மாவட்டத்தில் அனுமதியின்றி வாகனங்கள் இயக்குவோர், கூட்டங்கள் நடத்துபவர் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்பட்டு வாகனங்கள் பறிமுதல் செய்யப்படும் என்று மாவட்ட கலெக்டர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.



பெரம்பலூர் மாவட்ட கலெக்டர் அலுவலகக் கூட்ட அரங்கில் நேற்று தேர்தல் நடத்தை விதி முறைகள், ஒற்றைச் சாளர முறையில் அனுமதி பெற வேண்டிய வழிமுறைகள் குறித்து, அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரிதிநிதிகளுக்கான விளக்க கூட்டம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்திற்கு பெரம்பலூர் மாவட்டத் தேர்தல் அலுவலரான மிருணாளினி தலைமை வகித்தார். கூட்டத்தில் அவர் பேசியதாவது:

அரசியல் கட்சியினர் பிரச்சாரம் மற்றும் பொது கூட்டங்களுக்கான அனுமதி விண்ணப்பத்தை சம்பந்தப்பட்ட சட்டமன்ற தொகுதியின் தேர்தல் நடத்தும் அலுவலரிடம் 48 மணி நேரத்திற்கு முன்பு SUVIDHA செயலி (https://suvidha.eci.gov.in/ac/public/login) இணையதளம் வாயிலாக முறையாக விண்ணப்பம் செய்திட வேண்டும்.

சுவர் விளம்பரங்களுக்கு ஷிஹிக்ஷிமிஞ்பிகி செயலியின் வாயிலாக அனுமதி வழங்க இயலாது என்பதால் தேர்தல் நடத்தும் அலுவலரிடம் எழுத்துப்பூர்வ ஆணையாக அனுமதி பெற்றுக் கொள்ள வேண்டும்.

மேற்கண்ட விண்ணப்பத்திலேயே பிரச்சாரம், பொது கூட்டங்களில் மேற்கொள்ளப்பட போகும் செலவு திட்டத்தினை இணைப்பு ஞ்1ல் வழங்கிட வேண்டும். அனுமதி ஆணையின் அசல் உத்தரவை கைவசம் வைத்திருக்க வேண்டும்.

மேலும் பிரச்சார வாகனங்களில் ஒட்ட வேண்டும். உரிய அனுமதி இன்றி இயக்கப்படும், நடத்தப்படும் அனைத்து பிரச்சார கூட்டங்கள் நடத்துபவர் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும். அனுமதி இன்றி இயக்கப்படும் வாகனங்கள் பறிமுதல் செய்யப்படும்.

வீடு, வீடாக சென்று பிரச்சாரம் செய்வதற்கு, தற்காலிக கட்சி அலுவலகம் அமைப்பதற்கு, ஒலிபெருக்கியுடன் பொதுக் கூட்டம் நடத்துவதற்கு, ஒலி பெருக்கி இல்லாமல் பொது கூட்டம் நடத்துவதற்கு,

ஒலி பெருக்கியுடன் தெரு முனைப் பிரச்சாரம் நடத்துவதற்கு, ஒலிபெருக்கியுடன் ஊர்வலம் நடத்துவதற்கு, கொடிகள் மற்றும் பதாகைகள் வைப்பதற்கு, ஒரு தொகுதிக்குள் மட்டும் இயக்கப்படும் வாகனங்களுக்கு, மேடை மற்றும் தடுப்பரண்கள் அமைப்பதற்கு அந்தந்த சட்டமன்ற தொகுதிகளின் தேர்தல் நடத்தும் அலுவலர்களிடம் அனுமதி பெற வேண்டும்.

ஹெலிகாப்டர் மற்றும் ஹெலிபேடு அனுமதி, மாவட்டம் முழுவதும் இயக்கப்படும் வாகனங்களுக்கான அனுமதியினை மாவட்ட தேர்தல் அலுவலரிடம் பெற வேண்டும். அனைவரும் தேர்தல் ஆணையத்தின் விதிமுறைகளுக்கு உட்பட்டு அனுமதிகளை முறையாக விண்ணப்பித்து பெற்றுக் கொள்ள வேண்டும். இவ்வாறு அவர் பேசினார் .

இக்கூட்டத்தில் உதவி மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலரான மாவட்ட வருவாய் அலுவலர் கண்ணன், மாவட்டக் கலெக்டரின் நேர்முக உதவியாளர்கள் (தேர்தல்) வேல்முருகன், (பொது) சொர்ணராஜ், (கணக்குகள்) காந்திமதி, தேர்தல் நடத்தும் அலுவலர்கள் அனிதா (பெரம்பலூர்), சக்திவேல் (குன்னம்),

ஒற்றைச் சாளர முறையில் அனுமதி வழங்கும் அலுவலர் சிவக்கொழுந்து, மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர் பரிமளம், தேர்தல் தாசில்தார் அருளானந்தம், உதவி தேர்தல் நடத்தும் அலுவலக தாசில்தார்கள், அனைத்து ஒருங்கிணைப்பு அலுவலர்கள் உள்ளிட்ட அலுவலர்கள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## திருவள்ளூர் பழைய திருவிக பேருந்து நிலையத்தில் சட்டமன்ற பொது தேர்தலை முன்னிட்டு 100 சதவிகித வாக்குப்பதிவை வலியுறுத்தி பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள்




திருவள்ளூர் மார்ச் 28 :

திருவள்ளூர் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட பழைய திரு.வி.க பேருந்து நிலையத்தில் “தேர்தல் திருவிழாதமிழ்நாட்டின் பெருவிழா” சட்டமன்ற பொது தேர்தல் 2026 யை முன்னிட்டு 100 சதவிகித வாக்குப்பதிவை வலியுறுத்தி பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மாவட்ட தேர்தல் அலுவலரும் மாவட்ட ஆட்சியருமான மு.பிரதாப் தலைமையில் நடைபெற்றது.

அதன்படி திருவள்ளூர் பழைய திரு.வி.க பேருந்து நிலையத்தில் மாவட்ட தேர்தல் அலுவலரும் மாவட்ட ஆட்சியருமான மு.பிரதாப் தலைமையில் வாக்காளர் விழிப்புணர்வு உறுதிமொழியினை அனைவரும் ஏற்றுக் கொண்டனர். அதனைத் தொடர்ந்து செஃல்பி பூத்தில் குழு புகைப்படம் எடுத்துக் கொண்டு, பொதுமக்களுக்கு உறுதிமொழி பத்திரங்களை (சங்கல்ப் பத்திர) வழங்கியும், பேருந்துகளில் வாக்காளர் விழிப்புணர்வு ஒட்டுவில்லைகள் ஒட்டி விழிப்புணர்வு ஏற்படுத்தினார். அப்பொழுது மாவட்ட ஆட்சியரிடம் நரிக்குறவர் சமூகத்தை சேர்ந்த சிலர் வீட்டுமனை பட்டா வழங்கக்கோரி மனு அளித்தனர்.அந்த மனுவை படித்த மாவட்ட ஆட்சியர் மு.பிரதாப் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் என உறுதியளித்தார் .

இதில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குனரும் இணை இயக்குனருமான வை.ஜெயக்குமார், தமிழ்நாடு போக்குவரத்து கழக பொது மேலாளர் கோபால கிருஷ்ணன், திருவள்ளூர் வட்டார போக்குவரத்து அலுவலர் இராம கிருஷ்ணன், மாவட்ட வழங்கல் அலுவலர் வெங்கடேசன், உதவி இயக்குநர் (பயிற்சி) பி.மோகன், ஓட்டுநர்கள், நடத்துனர்கள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# லைக் போடாதீங்க ஓட்டு போடுங்க சேலம், ஆத்தூர் பரப்புரையில் சீமான் கலகல.



சேலம். மார்ச். 28–

சேலம் மாவட்டம் ஆத்தூர் மற்றும், கெங்கவல்லி தொகுதிகளில் போட்டியிடும் நாம் தமிழர் கட்சி வேட்பாளர்கள் அறிமுக பொதுக்கூட்டம் ஆத்தூர் ராணிப்பேட்டையில் நடைபெற்றது.

இந்த பொதுக்கூட்டத்தில் கட்சியின் மாநில ஒருங்கிணைப்பாளர் சீமான் கலந்து கொண்டு வேட்பாளர்களை அறிமுகப்படுத்தி சிறப்புரையாற்றினார்:

என் மக்கள் எப்படி இருக்க வேண்டும் என முன்னோர்கள் கண்ட கனவை நிறைவேற்ற வந்துள்ளோம் காசை வைத்து அரசியல் செய்ய வரவில்லை. ஐந்தாண்டுகளாக மக்கள் பிரச்சனையை தீர்க்காதவர்கள் இப்பொழுது உங்கள் கனவை சொல்லுங்கள் உங்கள் பிரச்சனை என்னவென்று சொல்லுங்கள் என்று கேட்டு வருகிறார்கள். எல்லா வளமும் இருந்து என் நாடு வறுமையில் இருக்கிறது அரசின் அனைத்து துறை ஊழியர்களும் போராட்டத்தில் ஈடுபட்டு வருகிறார்கள்.

அவர்களுக்கு நன்மை கிடைக்கவில்லை, கல்வி மருத்துவம் அனைவருக்கும் அரசு வேலை இதை நான் செய்வேன். கட்டணமில்லா மருத்துவ வசதி செய்து கொடுப்பேன். நான் விழுந்தாலும் என் இனம் எழுந்து நிற்க வேண்டும். எத்தனை கோடி பதவி கொடுத்தாலும் சரண் அடையாதவன் தான் சீமான்.

இந்த நாட்டில் உயர் குடிமகனுக்கு கிடைக்கும் அனைத்தும் அனைவருக்கும் கிடைக்கச் செய்வோம். கட்டணமில்லா மருத்துவம் ,வாசல் தேடி தூய குடிநீர் வரும், கல்வி கற்பதில் கட்டமைப்பை எல்லாம் மாற்றப்படும். பொருளாதாரம் தெரியாதவர்களுக்கு எல்லாம் ஓட்டை போட்டு நாட்டை கெடுத்து விட்டீர்கள். ஆனால் நான் இலவசம் எதுவும் தர மாட்டேன். கல்வி, மருத்துவம், வேலை தருவேன், சாராயம் விற்பனை செய்த காசு வேண்டாம். சாராயக்கடையை மூடுவேன். பால் வளர்ச்சிக்கு முக்கியத்துவம் கொடுப்பேன். அனைவருக்கும் அரசு வேலை தருவேன்.

அரசியல் தலைவர்கள் முதல் அரசு ஊழியர்கள் வரை அனைவரும் அரசு மருத்துவமனையில் தான் சிகிச்சை பெற வேண்டும் என்ற இந்த சட்டத்தை கொண்டு வருவேன். தனியார் மருத்துவமனைக்கு நிகராக அரசு மருத்துவமனையை உயர்த்துவேன். மருத்துவத் துறைக்கு ஆண்டுதோறும் கோடிக்கணக்கில் பட்ஜெட்டில் அரசு நிதி ஒதுக்கிறது.கோடிகள் தான் உயருகிறதே தவிர அரசு மருத்துவமனையின் தரம் உயரவில்லை.

ஏசி இல்லாமல், கார் இல்லாமல், பைக் இல்லாமல் வாழலாம். ஆனால் சோறு இல்லாமல் தண்ணீர் இல்லாமல் வாழ முடியாது .இதை கொடுப்பவன் விவசாயி. மடிக்கணினி, மிக்ஸி, போன்றவற்றை இலவசமாக கொடுத்தவர்கள் வாஷிங் மெஷின் கொடுப்பேன் என்று சொல்பவர்கள் தூய குடிநீரை இலவசமாக கொடுத்தேன் என்று சொல்கிறார்களா? அப்படி சொன்னால் அவர்களுக்கு வரும் கமிஷன் போய்விடும்.

ஆண்டுக்கு 2000 டிஎம்சி தண்ணீரை வீணாக்கி விட்டு 50,000 கோடி செலவில் கடல் தண்ணியை சுத்தம் செய்வதாக கூறி செலவழிக்கிறார்கள். ஆனால் நாங்கள் ஆட்சிக்கு வந்தால் ஏரி குளங்கள் எல்லாம் தண்ணீர் தேங்கி நிற்க வகை செய்து நீர் பற்றாக்குறையை போக்குவோம்.

நான் சொன்னால் செய்வேன் என்னை நம்புங்கள். தலைவர்களுக்கு பல துணை இருக்கு ஆனால் நாட்டில் அணை இல்லை. கல்வி, மருத்துவம் சந்தைக்கு வந்து விட்டது பத்தாண்டுகளில் பசுமை திட்டம் மூலம் செயல்படுத்துவேன்.

“யூடியூப்யில் Seeman latest Speech என டைப் செய்து சீமான் பேச்சைக் கேட்டு பாருங்க கேட்டுவிட்டு லைக் போடாம ஓட்டை போடுங்க “ என்று கூறினார். எல்லோருடைய ஆட்சியை பார்த்து விட்டோமே ஒருமுறை எங்களுக்கு ஓட்டு போட்டு பாருங்கள்.எங்கள் ஆட்சியைப் பாருங்கள் உங்கள் வாக்கை எங்களுக்கு தாருங்கள் விவசாயி சின்னத்திற்கு வாக்களியுங்கள் எனக்கூறி வாக்கு சேகரித்தார்.

சேலம் மாவட்டம் ஆத்தூர் மற்றும் , கெங்கவல்லி தொகுதிகளில் போட்டியிடும் நாம் தமிழர் கட்சி வேட்பாளர்கள் அறிமுக பொதுக்கூட்டம் ஆத்தூர் ராணிப்பேட்டையில் நடைபெற்றது. இந்த பொதுக்கூட்டத்தில் கட்சியின் மாநில ஒருங்கிணைப்பாளர் சீமான் கலந்து கொண்டு வேட்பாளர்களை அறிமுகப்படுத்தி சிறப்புரையாற்றினார்.



தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026ஐ முன்னிட்டு கிருஷ்ணகிரி வருவாய் கோட்டாட்சியர்அலுவலகத்தில் தேர்தலில் பணியாற்ற உள்ள மண்டல தேர்தல் பொறுப்பு அலுவலர்களுக்கான ஆய்வு கூட்டம் மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் தினேஷ்குமார் தலைமையில் நடைபெற்றது. உடன் கிருஷ்ணகிரி சட்டமன்ற தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலர் ஷாஜகான், கிருஷ்ணகிரி நகராட்சி ஆணையர் சேகர் உள்ளிட்ட பலர் உள்ளனர்.




தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தல் 2026யை முன்னிட்டு இராமநாதபுரத்தில் வாக்காளர் விழிப்புணர்வு குறித்து தூய்மைப் பணியாளர்களின் சங்கிலி பேரணியில் மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட ஆட்சித்தலைவர் சிம்ரன்ஜீத் சிங் காலோன், பங்கேற்றார். உடன் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதாரஇயக்க மாவட்ட திட்ட அலுவலர் பாபு உள்ளார்.

## பனியன் தொழிலாளர்கள் 100% வாக்கு அளிக்க விழிப்புணர்வு!!



திருப்பூர் :மார்ச்28

திருப்பூர் பெருமாநல்லூர் சாலை. சந்தோஷ் பனியன் தொழிற்சாலையில் 500க்கும் மேற்பட்ட தொழிலாளர்களுக்கு. வருகின்ற 2026 சட்டமன்றத் தேர்தல் 23ஆம் தேதி தமிழகம் முழுவதும் நடைபெற உள்ளதால் அனைத்து பனியன் தொழிலாளர்களும் தங்களுடைய பணிகளை நிறுத்தம் செய்து 100% அனைத்து தொழிலாளர்களும் வாக்குகள் அளிக்க வேண்டும்.

என்று விழிப்புணர்வு பேரணி தொழிற்சாலை வளாகத்தில் நடைபெற்றது. நிறுவனர் வினோத் குமார் மேலாளர் கோவிந்தராஜ். முன்னணியில் நடைபெற்றது.. வாக்காளர்களுக்கு. திருப்பூர் வருவாய் கோட்டாட்சியாளர் சிவப்பிரகாஷ். வட்டாட்சியாளர் கண்ணாமணி.

துணை வட்டாட்சியாளர் அருள். நில அளவையாளர்கள். மற்றும் அரசு துறையை சேர்ந்த அதிகாரிகள் தொழிலாளர்களிடம் 100% வாக்குகள் அவசியம் திருப்பூர் வடக்கு பகுதிகளில் சென்ற ஆண்டு மிகவும் குறைவான வாக்குகள் பதிவாக உள்ளதால் இம்முறை அனைத்து தொழிலாளர்களும் தங்களுடைய பணிகளை நிறுத்தம் செய்து வாக்குகள் அளிக்க வேண்டும் என்று தொழிலாளர்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தினர்..

## திருச்சியில் அதிரடி வேட்டை
### மது, கஞ்சா லாட்டரி 8 பேர் அதிரடியாக கைது
### பணம்,கஞ்சா, மது பாட்டில்கள் பறிமுதல்

திருச்சி மார்ச் 28

திருச்சி மாநகரில் கஞ்சா மற்றும் போதைப்பொருட்கள், லாட்டரி சீட்டுகள் அதிக அளவில் விற்கப்படுவதாக புகார்கள் வந்தன. இதையடுத்து திருச்சி மாநகர போலீஸ் கமிஷனர் உத்தரவின் பேரில் எடமலைப்பட்டி புதூர், ராம்ஜி நகர் மில்காலனி, சங்கிலியாண்டபுரம், கருமண்டபம், அரியமங்கலம், ஏர்போர்ட் அன்பில் நகர், உறையூர் பாண்டமங்கலம்,உறையூர் கோணக்கரை பகுதிகளில் அந்தந்த போலீஸ் இன்ஸ்பெக்டர்கள் தலைமையில் அதிரடி சோதனை நடத்தப்பட்டது. இந்த சோதனையில் கஞ்சா விற்றதாக இரண்டு பேரும், லாட்டரி சீட்டுகள் விற்றதாக ஒரு நபரும், போதைப்பொருட்கள் விற்றதாக மூன்று பேரும், மதுபான பாட்டில்கள் விற்றதாக 3 பேரும் கைது செய்யப்பட்டனர். கைது செய்யப்பட்ட 8 பேர்களிடம் இருந்து பணம், மது பாட்டில்கள், கஞ்சா ஆகியவை பறிமுதல் செய்யப்பட்டது.

## வணிக காஸ் சிலிண்டர் தட்டுப்பாடு
### திருப்பூரில் விறகு விலை அதிரடியாக உயர்வு

திருப்பூர் : மார்ச்.28–

அமெரிக்கா, இஸ்ரேல் ஆகிய நாடுகள் இணைந்து ஈரான் மீது போர் நடத்தி வருகிறது. இந்தப் போர் காரணமாக உலகம் முழுவதும் பெட்ரோல், காஸ் உள்ளிட்ட எரி பொருட்களுக்கு தட்டுப்பாடு நிலவுகிறது. நாடு முழுவதும் ஓட்டல்களில் பயன்படுத்தப்படும் வணிக கியாஸ் சிலிண்டர் தட்டுப்பாடும் நிலவுகிறது. இதனால் பல்வேறு ஓட்டல்களில் உணவு வகைகளின் எண்ணிக்கை குறைக்கப்பட்டும், உணவுகள் மற்றும் பலகாரங்களின் விலையும் அதிகரித்து விற்பனை செய்யப்படுகிறது.

தொழில் நகரமான திருப்பூரில் உள்ள உணவகங்களுக்கு வணிக பயன்பாட்டிற்கான சிலிண்டர் கிடைப்பதில் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. வழக்கமாக 1,700 ரூபாய் முதல் 2,000 ரூபாய் வரை விற்பனை செய்யப்படும் சிலிண்டர்கள் தற்போது 4,000 ரூபாய் முதல் 5,000 ரூபாய் வரையில் விற்பனை செய்யப்படுகிறது. அதுவும் கிடைப்பதில் தட்டுப்பாடு நிலவுவதாக உணவக உரிமையாளர்கள் வேதனை தெரிவிக்கின்றனர்.

தட்டுப்பாடு ஏற்பட்டது முதலே சிறு தள்ளுவண்டி உணவகங்கள் செயல்பட முடியாத நிலைக்கு சென்றுள்ளது. பல்வேறு இடங்களில் கடைகள் மூடப்பட்டுள்ளன. பல்வேறு பகுதிகளில் காஸ் சிலிண்டருக்கு பதிலாக உணவகங்களில் விறகு அடுப்புகள் பயன்படுத்த தொடங்கியுள்ளனர். ஓட்டல்கள் மட்டுமல்லாது ஹாஸ்டல் வசதியுடன் உள்ள பனியன் நிறுவனங்களிலும் விறகு அடுப்பு மூலம் சமையல் செய்யும் பணி தொடங்கப்பட்டுள்ளது.

இதனால் திருப்பூர் மாநகர் மற்றும் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் விறகுகளின் தேவை அதிகரித்துள்ளது. இதன் காரணமாக கடந்த மாதம் வரை 1 டன் ரூ.2,500க்கு விற்பனை செய்யப்பட்ட விறகு தற்போது ரூ.3,500 முதல் ரூ.4 ஆயிரம் வரை விற்பனை செய்யப்படுகிறது.இதுகுறித்து உணவக உரிமையாளர்கள் கூறும்போது, வணிக காஸ் சிலிண்டர்களுக்கான தட்டுப்பாடு தொடரத்தான் செய்கிறது. ஒருசிலர் இந்த காஸ் சிலிண்டர்களை பதுக்கி வைத்து அதிக விலைக்கு விற்பனை செய்கின்றனர்.

சிலிண்டர் தட்டுப்பாட்டால் விறகு அடுப்பிற்கு மாறி வருகிறோம். சொந்த கட்டிடம் என்றால் எளிதாக விறகு அடுப்பிற்கு மாறிவிடலாம். ஆனால் வாடகை கட்டிடம் என்றால் விறகு அடுப்பை பயன்படுத்தி சமையல் செய்ய கட்டிட உரிமையானவர்கள் அனுமதி மறுப்பதாக தெரிவித்தனர். விறகுகளின் தேவை அதிகரித்ததால் சிலிண்டர்களுக்கு இணையாக விறகுகளின் விலையும் அதிகரித்துள்ளதாக தெரிவிக்கின்றனர்.



எதிர்வரும் 23.04.2026 அன்று தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் நடைபெறுவதை முன்னிட்டுஈரோடு மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாட்ட ஆட்சித்தலைவர் கந்தசாமி, ஈரோடு செம்மாம்பாளையம் மஞ்சள் வணிக வளாகத்தில் தேர்தல் குறித்த விழிப்புணர்வை வலியுறுத்திடும் வகையில் 100 சதவீதம் வாக்குப்பதிவு குறித்த துண்டு பிரசுரங்களை விவசாயிகள் மற்றும் மஞ்சள் வியாபாரிகளுக்கு வழங்கி விழிப்புணர்வு ஏற்படுத்தினார்.

## திருவள்ளூர் அருகே உரிய ஆவணங்கள் இன்றி காரில் கொண்டுவரப்பட்ட 25 சவரன் நகை பறிமுதல்



திருவள்ளூர் மார்ச் 28 :

தமிழ்நாட்டில் தேர்தல் நடத்தை விதிமுறைகள் நடைமுறையில் உள்ள நிலையில் திருவள்ளூர் மாவட்டத்தில் தேர்தல் பறக்கும் படையினர் தீவிர வாகன சோதனையில் ஈடுபட்டு வாக்காளர்களுக்கு ஓட்டுக்கு பணம் கொடுப்பதை தடுக்க நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த நிலையில் திருவள்ளூர் அடுத்த பட்டரைப் பெரும்புதூர் சுங்க சாவடியில் தேர்தல் பறக்கும் படையினர் வாகன சோதனையில் ஈடுபட்டிருந்த போது ஆந்திர மாநிலம் திருப்பதியில் இருந்து சென்னைக்கு நோக்கி வந்துகொண்டிருந்த கிறி 03,சிஹி 2024 என்ற பதிவு எண் கொண்ட காரை நிறுத்தி சோதனை செய்தபோது அந்த காரில் உரிய ஆவணங்கள் இன்றி கொண்டு வரப்பட்ட சுமார் 30 லட்சம் ரூபாய் மதிப்புடைய 25சவரன் தங்க நகை மற்றும் வெள்ளிப் பொருட்களை தேர்தல் பறக்கும் படையினர் பறிமுதல் செய்தனர்.

மேலும் தேர்தல் அலுவலர் ரவிச்சந்திரன் மேற்கொண்ட விசாரணையில் ஆந்திராவில் இருந்து சென்னை நோக்கி வந்த இளைஞர் ராகேஷ் என்பதும் அவர் சோழிங்கநல்லூர் பகுதியில் தங்கி வேலை பார்த்து வருவதும் தெரியவந்தது மேலும் நகைகளுக்கு உரிய ஆவணங்களை காட்டி விட்டு நகைகளை பெற்றுக் கொள்ளுமாறு தேர்தல் அலுவலர் ரவிச்சந்திரன் அறிவுறுத்தினார். இதனைத் தொடர்ந்து ஆவணங்கள் இன்றி பறிமுதல் செய்யப்பட்ட தங்க மற்றும் வெள்ளி நகைகள் நகை கணக்கீட்டாளரை கொண்டு மதிப்பீடு செய்யப்பட்ட பின் பத்திரமாக கருவூலத்தில் ஒப்படைத்தனர்.

# சேலத்தில் விபத்தில் சிக்கி சிறுமூளையில் ரத்தக்கசிவு ஏற்பட்ட ஏட்டுவுக்கு ஜி.ஹெச்.,ல் ஆபரேஷன்

## *வெற்றிகரமாக நடத்திய மருத்துவர்களுக்கு கமிஷனர் பாராட்டு



சேலம் : மார்ச்.28–

சேலத்தில் விபத்தில் சிக்கிய கைரேகை பிரிவு ஏட்டுக்கு, மூளையில் வெற்றிகரமாக அறுவை சிகிச்சை செய்த டாக்டர்கள் குழுவினருக்கு மாநகர போலீஸ் கமிஷனர், சால்வை அணிவித்து பாராட்டு தெரிவித்தார்.சேலம் மாநகர நுண்ணறிவுப் பிரிவில் பணியாற்றும் எஸ்எஸ்ஐக்கள், ஏட்டுகளுக்கு வாரம் தோறும் மாநகர போலீஸ் கமிஷனர் அனில்குமார் கிரி அறிவுரைகளை வழங்குவார்.

அந்நேரத்தில் அவர்களின் பகுதியில் நடக்கும் விவரங்களை ஒவ்வொருவரும் தெரிவிப்பார்கள். இதன்படி, நேற்று நடந்த கூட்டத்தில், அரசு மருத்துவமனை போலீஸ் ஸ்டேசன் எஸ்.எஸ்.ஐ. சரவணன், மாவட்ட ரேகை பிரிவு ஏட்டு விஜயகுமார்(36) விபத்தில் சிக்கிய விவரத்தை கூறினார்.

கடந்த 4 நாட்களுக்கு முன்பு, குமாரசாமிப்பட்டி ஆயுதப்படை ரோட்டில் நடந்து வந்த விஜயகுமார் மீது ஆட்டோ ஒன்று மோதியது. இதில் கீழே விழுந்த அவரது தலையில் பலத்த காயம் ஏற்பட்டது. அந்த ஆட்டோ டிரைவரே, அவரை சேலம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்.

உடனடியாக மருத்துவமனை டாக்டர்கள் பரிசோதனை செய்தனர்.இதில் சிறுமூளையில் ரத்தம் கசிந்தது தெரியவந்தது. உடனடியாக அவரது மனைவி மற்றும் பெற்றோரிடம் அனுமதி பெற்று, மண்டையை பிளந்து அறுவை சிகிச்சை செய்தனர். இந்த அறுவை சிகிச்சை வெற்றிகரமாக அமைந்தது. இதுபோன்ற அறுவை சிகிச்சை செய்ய வேண்டுமானால், தனியார் மருத்துவமனையில் குறைந்தது ரூ.50 லட்சம் செலவு செய்ய வேண்டும்.

ஆனால் அரசு மருத்துவமனையில் இலவசமாக செய்யப்பட்டது. இதற்கிடையில், அவரது பெற்றோர் ஏட்டு விஜயகுமாரை கோவையில் உள்ள தனியார் மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். அங்கு பரிசோதனை செய்து பார்த்த டாக்டர்கள், இதற்கு முன்பாக எந்த மருத்துவமனையில் சிகிச்சை அளித்தீர்கள் என கேட்டுள்ளனர்.

சேலம் அரசு மருத்துவமனையில் நடந்தது என்ற விவரத்தை தெரிவித்தனர். அந்த மருத்துவமனை டாக்டர்களோ, இந்த அறுவை சிகிச்சை மிகவும் அற்புதமாக செய்துள்ளனர் என்று பாராட்டு தெரிவித்துள்ளனர் என்றார்.

இந்த விவரத்தை உன்னிப்பாக கேட்ட போலீஸ் கமிஷனர் அனில்குமார் கிரி, அரசு மருத்துவமனையில் இவ்வளவு அற்புதமான அறுவை சிகிச்சை செய்யப்பட்டுள்ளதா என ஆச்சரியத்துடன் கேட்டார்.

உடனடியாக அந்த மருத்துவ குழுவினரை பார்க்க வேண்டும் என கூறியதுடன், கூட்டத்தை உடனே முடித்துக்கொண்டு, நுண்ணறிவு பிரிவு உதவி கமிஷனர் வெங்கடேசன், இன்ஸ்பெக்டர் சீனிவாசன் ஆகியோருடன் அரசு மருத்துவமனைக்கு விரைந்து சென்றார்.

அங்கு அறுவை சிகிச்சை நிபுணர் சங்கர் உள்ளிட்ட 8 பேருக்கு, சால்வை அணிவித்து வாழ்த்து தெரிவித்ததுடன், நினைவு பரிசையும் வழங்கி பாராட்டினார். இதனால் டாக்டர் குழுவினர் மகிழ்ச்சியடைந்தனர்.



திருவள்ளூர் மாவட்டம் செவ்வாய்பேட்டை அரசினர் தொழிற்பயிற்சி கல்லூரி மற்றும் பெருமாள்பட்டு தனியார் பள்ளி மற்றும் கல்லூரி வளாகத்தில் சட்டமன்ற பொதுத் தேர்தல் 2026யை முன்னிட்டு அமைக்கப்படவுள்ள வாக்கு எண்ணிக்கை மையத்தை ஆவடி மாநகர காவல் ஆணையர் பிரேம் ஆனந்த் சின்ஹா மற்றும் மாவட்ட தேர்தல் அலுவலர் மு.பிரதாப் ஆகியோர் நேரில் ஆய்வு மேற்கொண்டு அனைத்து ஏற்பாடுகளையும், அடிப்படை வசதிகளையும் மேற்கொள்ள சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு உத்தரவிட்டனர். இதில் ஆவடி காவல் துணை ஆணையர் பெரோஸ்கான் அப்துல்லா, உதவி மாவட்ட தேர்தல் அலுவலரும் மாவட்ட வருவாய் அலுவலருமான ச.சுரேஷ்,உதவி இயக்குநர் (நிலஅளவை) பேச்சியப்பன்,மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (தேர்தல்) டீ. ஸ்ரீராம்,பொதுப்பணி துறை செயற்பொறியாளர் பி.தேவன்,பல்வேறு துறை சார்ந்த அரசு அலுவலர்கள், மற்றும் காவல் துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# ஆர்.ஆர் .ரவி யோகா சென்டர் , வி. ஏ.டி. பள்ளி ஆகியவை இணைந்து 100 சதவீதம் வாக்களிப்பது அவசியம் குறித்து வாக்காளர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தினர்!!



திருப்பூர். மார்ச்28

திருப்பூரில் தேர்தலில் 100% வாக்களிப்பதன் அவசியம் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் யோகாசனம் நிகழ்வு.

பள்ளி வளாகத்தில் 100 எண் வடிவில் அமர்ந்து 50க்கும் மேற்பட்ட மாணவ மாணவிகள் பல்வேறு யோகாசனங்கள் செய்து விழிப்புணர்வு.

திருப்பூர் அருகே கணபதிபாளையத்தில் யோவா யோகா அகாடமி , டாக்டர் ஆர்.ஆர் .ரவி யோகா சென்டர் , வி. ஏ.டி. பள்ளி ஆகியவை இணைந்து 100 சதவீதம் வாக்களிப்பது அவசியம் குறித்து வாக்காளர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் செய்யும் பள்ளி மாணவ மாணவிகள் பங்கேற்ற யோகா உலக சாதனை நிகழ்வு நடைபெற்றது.

இதில் மாணவ, மாணவிகள் 100 எண் வடிவில் அமர்ந்து 100 சதவீதம் ஜனநாயக கடமை ஆற்ற வேண்டும் என வாக்களிக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தும் வகையில் பல்வேறு யோகாசனத்தின் மூலம் விழிப்புணர்வு நிகழ்வு செய்து அசத்தினர்.

முன்னதாக பள்ளி வளாகத்தில் 15 அடி உயரம் உள்ள கம்பத்தின் மீது 54 மாணவ, மாணவிகள் அமர்ந்து 20க்கும் மேற்பட்ட ஆசனங்கள் 4 நிமிடங்கள் செய்து உலக சாதனை பதிவு செய்தனர். இதேபோன்று 10 மாணவ மாணவிகள் சிலம்பம் சுற்றிக் கொண்டே சக்ராசனம், சக்ர பந்தாசனம், திரிவிக்ரமாசனம், உசட்டாசனம், பத்மாசனம் செய்து 3 நிமிட உலக சாதனை பதிவு செய்தனர், இந்த உலக சாதனை நிகழ்த்திய மாணவ மாணவிகளுக்கு யோவா யோகா உலக சாதனை நிறுவனத்தின் நிறுவனர் சரவணன், அஃபீஸியல் சுரேஷ் ஆகியோர் பதக்கமும் சான்றிதழும் வழங்கி மாணவி மாணவிகளுக்கு பாராட்டு தெரிவித்தனர்.

பேட்டி மாணவ மாணவிகள் 1.சம்யுக்தா ( உலக சாதனை மாணவி) 2.சிவானி ( உலக சாதனை மாணவி) 3. RR ரவி _ ( யோகா மாஸ்டர்) 4. வேதிஷா பள்ளி மாணவி 5. எம் . சந்தியா ( சிலம்பம் மாணவி)

# 100 சதவீதம் வாக்களிக்க கோரி காய்கறிகள் மூலம் விழிப்புணர்வு *கலெக்டர் தொடங்கி வைத்தார்



திருப்பூர் : மார்ச்.28

காய்கறிகள் மூலம் 100 சதவீதம் வாக்களிப்போம் என்ற விழிப்புணர்வு நிகழ்ச்சி மாவட்ட கலெக்டர் நேற்று புதிய பஸ் நிலையம் உழவர் சந்தையில் துவக்கி வைத்து விவசாயிகள், வியாபாரிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தினார்.

ஜனநாயக திருவிழா நிகழ்வான தேர்தலில் பொதுமக்கள் 100 சதவிகிதம் வாக்களித்து தங்களது ஜனநாயக கடமையை நிறைவேற்ற வேண்டும் என்பதை வலியுறுத்தி தொடர் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகிறது.

அதன்படி திருப்பூர் புதிய பேருந்து நிலையம் அருகே உள்ள உழவர் சந்தையில் வேளாண் துறை சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த விழிப்புணர்வு நிகழ்ச்சியில் காய்கறிகளை அடுக்கி 100 சதவீதம் வாக்களிப்போம் ஜனநாயக கடமை ஆற்றுவோம் என வாசகத்தை உருவாக்கி விழிப்புணர்வு நிகழ்ச்சி நடத்தினர்.

இதனை திருப்பூர் மாவட்ட கலெக்டர் மனிஷ் நாராணவரே துவக்கி வைத்தார். மேலும் உழவர் சந்தையில் இருந்த விவசாயிகள் மற்றும் வியாபாரிகளுக்கு துண்டு பிரசுரங்கள் வினியோகித்து 100 சதவீதம் வாக்களிக்க வேண்டியது அவசியம் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தினார்.

## புதுச்சேரியில் தனித்துப்போட்டி விசிக வேட்பாளர் பட்டியல் வெளியீடு

புதுச்சேரி சட்டப்பேரவைத் தேர்தல் ஏப்ரல் 9ம் தேதி நடைபெற உள்ளது. இதில் காங்கிரஸ் தலைமையிலான கூட்டணியில் திமுகவுக்கென 14 தொகுதிகள் ஒதுக்கப்பட்டது. அதில் 'உழவர்கரை தொகுதியை' திமுக விடுதலைச் சிறுத்தைகள் கட்சிக்கு ஒதுக்கியது. அந்தத் தொகுதியில் ஆர்.எஸ்.எஸ், பாஜவைச் சார்ந்தவரும், பாஜவிலிருந்து விலகி ஓரிரு வாரங்களுக்கு முன்பு காங்கிரஸ் கட்சியில் சேர்ந்தவருமான ஒருவரை தற்போது காங்கிரஸ் கட்சி வேட்பாளராக நிறுத்தியுள்ளது.

அந்த தொகுதி விசிகவுக்கென ஒதுக்கப்பட்ட பிறகும்கூட அவரை வாபஸ் பெற வைக்காமல் புதுவை காங்கிரஸ் மறுத்துவிட்டது. இதனால் வேறு வழியின்றி விசிக வேட்புமனுத் தாக்கல் செய்துள்ள மூன்று தொகுதிகளுக்குமான அதிகாரப்பூர்வமான வேட்பாளர்களை திருமாவளவன் அறிவித்துள்ளார். அதன்படி, ஊசுடு அரியபுத்ரி (எ) அரிமாத்தமிழன், நெட்டப்பாக்கம் அமுதவன், உழவர்கரை செல்வ.புஷ்பலதா ஆகியோர் போட்டியிட உள்ளனர்.

## திருச்சி எடமலைப்பட்டி புதூரில் முதியவருக்கு கத்திக்குத்து மற்றொரு முதியவர் மீது வழக்கு:

திருச்சி மார்ச் 28

திருச்சி ,எடமலைப்பட்டி புதூர் ஆர்.எம்.எஸ் காலனி அண்ணாநகர் பகுதியைச் சேர்ந்தவர் கிருஷ்ணமூர்த்தி (வயது 75).இவர் தனது வீட்டின் அருகே நின்று கொண்டிருந்தார்.அப்போது அங்கு வந்த அதே பகுதியைச் சேர்ந்த ரங்கசாமி (வயது 81).என்பவர் கிருஷ்ணமூர்த்தி உடன் மது போதையில் தகராறு செய்து தகாத வார்த்தைகளால் திட்டி கத்தியால் குத்தினார்.இதில் கிருஷ்ணமூர்த்திக்கு தலையில் காயம் ஏற்பட்டது.அவர் அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்றார்.இதுகுறித்த புகாரியின் பெயரில் ரங்கசாமி மீது எடமலைப்பட்டி புதூர் போலீசார் வழக்கு பதிவு விசாரணை நடத்தி வருகின்றனர்.

# சி.ம.புதூர் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் முப்பெரும் விழா..!




வந்தவாசி, மார்ச் 28:

திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி அடுத்தசி.ம.புதூர் ஊராட்சி ஒன்றியதொடக்கப்பள்ளியில் பள்ளி ஆண்டு விழா, விளையாட்டு போட்டிகளில் சிறப்பிடம் பெற்ற மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கும் விழா உள்ளிட்ட முப்பெரும் விழாவாக வெகு விமரிசையாகநடைபெற்றது. இந்த விழாவிற்கு பள்ளி தலைமை ஆசிரியர் ஆர்.நம்பெருமாள் தலைமை தாங்கினார். தெள்ளார் வட்டார கல்வி அலுவலர்கள் கோ.குணசேகரன் எ.பச்சையப்பன், தெள்ளார் ரோட்டரி கிளப் சாசன தலைவர் டிகேஜி ஆனந்தன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.பள்ளி ஆசிரியை பாரதி வரவேற்றார்.

சிறப்பு அழைப்பாளராக மாவட்ட கல்வி அலுவலர்(செய்யாறு) சி.வீரமணி பங்கேற்று சிறப்புரை ஆற்றினார். மேலும் கோவில்பட்டி பட்டிமன்ற பேச்சாளர் டி.அன்னபாரதி பங்கேற்று, இன்றைய மாணவர்களின் கற்றல் நிலைகள் பற்றி நகைச்சுவை உணர்வுடன் விளக்கி கூறினார். மேலும் மாவட்ட ஒருங் கிணைப்பாளர் சுப.தமிழ்நேசன், வட்டார வள மைய ஒருங்கிணைப்பாளர் ராஜா, ஆசிரியர் பயிற்றுநர் பாலாஜி, மாவட்ட கருத்தாளர் மதியழகன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். பள்ளி மேலாண்மை குழு தலைவர் த.தமிழ்ச் செல்வி, துணைத் தலைவர் கு.துர்கா தேவி ஆகியோர் நிகழ்வை ஒருங்கிணைத்தனர்.மேலும் மாணவ மாணவிகளின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்று பரிசுகள் வழங்கப்பட்டது. இதில் பள்ளி மாணவ மாணவிகள், பெற்றோர்கள், சமூக ஆர்வலர்கள் உள்ளிட்ட ஏராளமானோர் பங்கேற்றனர். இறுதியில் கல்வியாளர் பொன்.சந்திர சேகரன் நன்றி கூறினார்.

## திருவள்ளூர் அருகே யமஹா இருசக்கர வாகனத்தில் சென்ற வெல்டர் லாரி மோதி சம்பவ இடத்திலேயே பலியான நிலையில் பலத்த காயமடைந்த அவரது நண்பர் சிகிச்சை பலனின்றி பலி :

திருவள்ளூர் மார்ச் 28 :

திருவள்ளூர் அடுத்த கிளாம்பாக்கம் பகுதியைச் சேர்ந்த வெல்டர்கள் பாலாஜி (27) சஞ்சய் (25) இருவரும் கடந்த 23 ம் தேதி யமஹா எம் டி இருசக்கர வாகனத்தில் தனது ஊரிலிருந்து தண்டலம் நோக்கி வந்துள்ளனர். அப்போது தண்டலம் பகுதியில் உள்ள சாலை வளைவில் கடக்க முயன்ற போது இருசக்கர வாகனம் எதிரே வந்த லாரி மீது மோதியதில் பின்னால் அமர்ந்திருந்த பாலாஜி சம்பவ இடத்திலேயே பலியானர்.



இதில் படுகாயமடைந்த சஞ்சய் மீட்கப்பட்டு திருவள்ளூர் மாவட்ட அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட அவர் மேல் சிகிச்சைக்காக சென்னை ராஜீவ் காந்தி அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்தார்.இச்சம்பவம் தொடர்பாக போக்குவரத்து புலனாய்வு போலீசார் வழக்குப்பதிவு செய்து கர்நாடகா பதிவு எண் கொண்ட லாரியை பறிமுதல் செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்நிலையில் படுகாயமடைந்த சஞ்சய் சென்னை ராஜீவ் காந்தி அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் பலியானதாக மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.சாலை வளைவில் தொடர்ந்து விபத்துக்கள் நடைபெறும் பகுதியாக மாறி வருவதால் விபத்தை தவிர்க்கும் வகையில் நெடுஞ்சாலைத் துறையினர் எச்சரிக்கை பலகை அல்லது சாலை நேராக அமைக்க வேண்டும் என வாகன ஓட்டிகள் கோரிக்கை வைத்துள்ளனர்.

# கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள போச்சம்பள்ளி சந்தூர் கிராமத்தில் தெருநாய்கள் அட்டகாசம்:

## பொதுமக்கள் மற்றும் பள்ளி மாணவர்கள் கடும் அச்சம்!



போச்சம்பள்ளி: மார்ச். 28

கிருஷ்ணகிரி மாவட்டம், போச்சம்பள்ளி தாலுகாவிற்கு உட்பட்ட சந்தூர் கிராமத்தில் தெருநாய்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதால், அப்பகுதி பொதுமக்கள் மற்றும் பள்ளி மாணவ மாணவிகள் கடும் அச்சத்துடன் வாழும் சூழல் நிலவுகிறது.

சந்தூர் கிராமத்தின் முக்கிய வீதிகள் மற்றும் தெருக்களில் நாய்கள் கூட்டமாகச் சுற்றித் திரிகின்றன. சாலையில் நடந்து செல்லும் பெரியவர்கள் முதல் சிறியவர்கள் வரை அனைவரையும் துரத்திச் சென்று கடிக்க முயல்வதால், மக்கள் வீட்டை விட்டு வெளியே வரக்கூட அஞ்சுகின்றனர்.

குறிப்பாக, காலை மற்றும் மாலை நேரங்களில் பள்ளிக்குச் செல்லும் மாணவ மாணவிகள் இந்த நாய் தொல்லையால் பெரும் அவதிக்குள்ளாகின்றனர். நாய்கள் திடீரென குரைத்துக்கொண்டு துரத்துவதால், பயத்தில் ஓடும் குழந்தைகள் கீழே விழுந்து காயமடையும் சம்பவங்களும் அரங்கேறி வருகின்றன.

இது குறித்து அப்பகுதி மக்கள் கூறுகையில்:

"தெருக்களில் நாய்கள் பயங்கரமாக அச்சுறுத்துகின்றன. குழந்தைகளைத் தனியாக வெளியே அனுப்பவே பயமாக இருக்கிறது. இது குறித்து அதிகாரிகளிடம் முறையிட்டும் இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அசம்பாவிதங்கள் ஏதேனும் நடப்பதற்கு முன்பாக அதிகாரிகள் தலையிட வேண்டும்," என கோரிக்கை விடுத்துள்ளனர்.

எனவே, சம்பந்தப்பட்ட ஊராட்சி நிர்வாகமும், மாவட்ட நிர்வாகமும் விரைந்து நடவடிக்கை எடுத்து, தெருநாய்களைக் கட்டுப்படுத்தவும், பொதுமக்களின் அச்சத்தைப் போக்கவும் முன்வர வேண்டும் என சமூக ஆர்வலர்கள் மற்றும் கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

குறிப்பு :

கால்நடை மருத்துவர் ஹெல்த் இன்ஸ்பெக்டர் ஊராட்சி செயலாளர் கண்டு கொள்வதில்லை

பொதுமக்கள் நாய்களை வளர்க்கும் போது உரிமம் பெறாமலும் முறையாக தடுப்பூசி செலுத்தாமல் வளர்க்கின்றன கண்டுகொள்ளாத அதிகாரிகள்

பொதுமக்களை கடிக்கும் போது பல்வேறு உடல் பாதிப்புகளுக்கு ஆளாகின்றனர்.

# 2026 சட்டமன்றத் தேர்தல் - புதுச்சேரிக்கு "மாநில அந்தஸ்து" பெற்றுத் தரும் நோக்கில் பாஜக தலைமையிலான NDA கூட்டணிக்கு ஏ.கே.ஆர். தேசிய மக்கள் கட்சி நிபந்தனையற்ற ஆதரவு

புதுச்சேரி, மார்ச் 28:

வருகின்ற 2026 புதுச்சேரி சட்டமன்றத் தேர்தலை முன்னிட்டு, மாநிலத்தின் நீண்ட நாள் கோரிக்கையான "புதுச்சேரிக்கு மாநில அந்தஸ்து" பெற்றுத் தரும் நோக்கிலும், ஒட்டுமொத்த வளர்ச்சி மற்றும் மக்கள் நலனை கருத்தில் கொண்டு, ஏ.கே.ஆர். தேசிய மக்கள் கட்சி, பாரதிய ஜனதா கட்சி தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணிக்கு (NDA) தனது முழுமையான மற்றும் நிபந்தனையற்ற ஆதரவை வழங்க முடிவு செய்துள்ளது.




இதனையடுத்து, புதுச்சேரி பாரதிய ஜனதா கட்சி தலைமை அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்வில், கட்சியின் நிறுவனத் தலைவர் திரு. ஏ.கே. ராஜசேகர் அவர்கள், பாஜக மாநிலத் தலைவர் திரு. ராமலிங்கம் அவர்களை நேரில் சந்தித்து, அதிகாரப்பூர்வ ஆதரவுக் கடிதத்தை வழங்கினார்.

இந்த நிகழ்வில், கட்சியின் முக்கிய நிர்வாகிகளான ஜி. தேவநாதன், டி. கந்தவேலு, எஸ். சத்தியநாராயணன், பி. பிரகாஷ், ஜே. சக்திவேலு உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். மேலும் பல்வேறு அணி நிர்வாகிகள், பொறுப்பாளர்கள் மற்றும் தொண்டர்களும் நிகழ்வில் பங்கேற்றனர்.

இதுகுறித்து தலைவர் ஏ.கே. ராஜசேகர் அவர்கள் தெரிவித்ததாவது:

புதுச்சேரி மாநிலத்தின் உரிமைகளைப் பாதுகாக்கவும், இளைஞர்களுக்கான வேலை வாய்ப்பை உருவாக்கவும், நிலையான நிர்வாகம் அமையவும் "மாநில அந்தஸ்து" வழங்கப்பட வேண்டும் என்பது எங்களது கட்சியின் முதன்மை நோக்கமாகும். மத்திய அரசின் ஒத்துழைப்புடன் இக்கோரிக்கையை நிறைவேற்றவும், நாட்டின் வளர்ச்சியை முன்னெடுத்து வரும் தேசிய ஜனநாயகக் கூட்டணியின் கரங்களை வலுப்படுத்தவும் இந்த ஆதரவு வழங்கப்படுகிறது.

மேலும், தற்போதைய சூழலில் வாக்குகள் சிதறுவது மாநிலத்தின் ஸ்திரத்தன்மைக்கு பாதிப்பை ஏற்படுத்தும் என்பதால், தனித்துப் போட்டியிடும் முடிவை கைவிட்டு, கூட்டணி வேட்பாளர்களின் வெற்றிக்காக முழுமையாக செயல்பட தீர்மானிக்கப்பட்டுள்ளது. புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் உள்ள கட்சித் தொண்டர்கள் முழு வீச்சில் களப்பணியாற்றி வெற்றியை உறுதி செய்வார்கள் என்றும் தெரிவித்தார்.

இந்த ஆதரவு அறிவிப்பை பாஜக மாநிலத் தலைவர் திரு. ராமலிங்கம் அவர்கள் வரவேற்று, ஏ.கே.ஆர். தேசிய மக்கள் கட்சிக்கு தனது நன்றியை தெரிவித்தார்.

இச்செய்தியினை தங்கள் செய்தி பிரிவின் மூலம் சிறப்பான செய்தியாக வெளியிடுமாறு பணிவோடு கேட்டுக்கொள்கிறோம்

இப்படிக்கு ஏ.கே. ராஜசேகர்
நிறுவன தலைவர் ஏ.கே.ஆர்
தேசிய மக்கள் கட்சி புதுச்சேரி.



தமிழ்நாடு வணிகர்களின் சங்கமம் சார்பில் ரவி அண்ணாமலை தலைமையில் லட்சிய ஜனநாயக கட்சியின் தலைவர் திரு ஜோஸ் சார்லஸ் மார்ட்டின் அவர்களை சந்தித்து தேர்தலுக்காக தங்களது ஆதரவினை தெரிவித்தனர்

## லட்சிய ஜனநாயக கட்சியின் தலைவர் ஜோஸ் சார்லஸ் மார்டின் அவர்களை ஆதரித்து காமராஜ் நகர் தொகுதியில் பாஜக அகில இந்திய மகளிர் அணி தலைவி வானதி சீனிவாசன் தீவிர தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டார்.



புதுச்சேரி, மார்ச். 28–

பாஜக அகில இந்திய மகளிர் அணி தலைவி வானதி சீனிவாசன் அவர்கள், லட்சிய ஜனநாயக கட்சியின் தலைவர் ஜோஸ் சார்லஸ் மார்டின் அவர்களை ஆதரித்து காமராஜ் நகர் தொகுதியில் தீவிர தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டார்.

இந்த பிரச்சாரத்தின் போது, அவர் பகுதி தோறும் வீடு வீடாக சென்று பொதுமக்களை நேரில் சந்தித்து ஆதரவு கோரினார். குறிப்பாக, லட்சிய ஜனநாயக கட்சியின் வேட்பாளரான ஜோஸ் சார்லஸ் மார்டின் அவர்களுக்கு "தர்பூசணி" சின்னத்தில் வாக்களிக்குமாறு கேட்டுக் கொண்டார்.

அவர் தனது பேச்சில், இந்த தொகுதியில் வளர்ச்சி பணிகளை விரைவாக முன்னெடுக்க வல்லவர் ஜோஸ் சார்லஸ் மார்டின் என்பதையும், மக்களின் அடிப்படை தேவைகள் மற்றும் பிரச்சினைகளை தீர்க்கும் திறன் அவருக்கு இருப்பதையும்,

மக்கள் நலனை முன்னிலைப்படுத்தும் மாற்று அரசியலை உருவாக்க வேண்டிய அவசியம் இருப்பதையும் வலியுறுத்தினார். மேலும், பொதுமக்களுடன் நட்பு சூழலில் உரையாடி, பெண்கள், இளைஞர்கள் மற்றும் முதியோரின் கோரிக்கைகளையும் கவனமாக கேட்டறிந்தார். பல இடங்களில் பெண்கள் ஆரத்தி எடுத்து வரவேற்பு அளித்ததுடன், மலர் தூவி உற்சாக ஆதரவை வெளிப்படுத்தினர்.

இந்த பிரச்சாரத்தில் பாஜக மற்றும் லட்சிய ஜனநாயக கட்சி நிர்வாகிகள், உள்ளூர் தொண்டர்கள் மற்றும் கூட்டணி ஆதரவாளர்கள் பெருமளவில் கலந்து கொண்டனர். வானதி சீனிவாசன் அவர்களின் நேரடி பிரச்சாரம், காமராஜ் நகர் தொகுதியில் ஜோஸ் சார்லஸ் மார்டின் அவர்களுக்கு ஆதரவு அதிகரித்து உள்ளது

## கலெக்டர் அலுவலகத்திற்கு மீண்டும் வெடிகுண்டு மிரட்டல்

மதுரை : மார்ச்.28–

மதுரை பழைய கலெக்டர் அலுவலகம் மற்றும் கூடுதல் கட்டிடத்தில் வெடிகுண்டு வைக்கப்பட்டுள்ளதாக நேற்று இ மெயில் வாயிலாக மதுரை மாநகர போலீசாருக்கு தகவல் கிடைத்தது.

இதையடுத்து வெடிகுண்டு தடுப்பு பிரிவினர் மோப்பநாய் உதவியுடன் கலெக்டர் அலுவலகத்திற்கு விரைந்து வந்தனர். அங்கு பல்வேறு பகுதிகளிலும் இருந்த அதிகாரிகள் மற்றும் பொதுமக்கள் வெளியேற்றப்பட்டு, தீவிர சோதனை நடத்தப்பட்டது. இதன்படி கலெக்டர் அலுவலகத்தின் பழைய கட்டிடம், கூடுதல் கட்டிடம் என இரு இடத்திலும் சுமார் ஒரு மணி நேரத்திற்கும் மேலாக சோதனை நடந்தது. இதன் முடிவில் எங்கும், எந்தவிதமான வெடிபொருளும் கண்டறியப்படவில்லை.

இதனால், வெடிகுண்டு மிரட்டல் புரளி என்பது உறுதியானது. இந்த வெடிகுண்டு மிரட்டல் மற்றும் சோதனை பணிகளால், கலெக்டர் அலுவலக வளாகம் பெரும் பரபரப்புடன் காணப்பட்டது.

## பறிமுதல் செய்ததை திரும்ப பெற மாவட்டம் தோறும் குறை தீர்ப்புக் குழுக்கள் அமைப்பு: தேர்தல் ஆணையம் அறிவிப்பு

சென்னை: பறக்கும் படை மற்றும் நிலை கண்காணிப்புக் குழுக்களால் பறிமுதல் செய்யப்பட்ட பணம் மற்றும் இதர பொருட்களை உரிய ஆவணங்களை சமர்பித்து, திரும்ப பெற்றுக் கொள்ள மாவட்டந்தோறும் குறை தீர்ப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. பொதுமக்கள் பறிமுதல்கள் தொடர்பான குறைகளுக்கு இக்குழுக்களை அணுகி தீர்வு பெற்றுக்கொள்ளலாம் என தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது. மாவட்டம்தோறும் அமைக்கப்பட்டுள்ள இக்குழுக்களின் தொடர்பு எண்கள் :


* திருவள்ளூர் 7373704202, * சென்னை 9551055182, * காஞ்சிபுரம் 9442745251

இதேபோல் அனைத்து மாவட்டங்களுக்கும் தொடர்பு எண்கள் வழங்கப்பட்டுள்ளன.

## புதுச்சேரி அரியங்குப்பம் சுயேச்சை வேட்பாளர் ஆ. ரகு மீதுள்ள குற்றவியல் வழக்குகள் விவரம் (இந்திய தேர்தல் ஆணையத்தின் அறிவுறுத்தலின்படி வெளியிடப்படுவது)

புதுச்சேரி, மார்ச் 28,

புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில் வரும் ஏப்ரல் 9ஆம் தேதி நடைபெறவுள்ள சட்டமன்றத் தேர்தலில், அரியங்குப்பம் தொகுதியில் சுயேச்சை வேட்பாளராகப் போட்டியிடும் ஆ. ரகு (எ) ரகுநாதன்,





தேர்தல் ஆணையத்தின் விதிமுறைப்படி தன் மீதுள்ள குற்றவியல் வழக்குகள் குறித்த விவரங்களைச் செய்தியாக வெளியிட்டுள்ளார்.

உச்ச நீதிமன்றத் தீர்ப்பின்படி, தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் தங்கள் மீதான வழக்கு விவரங்களை பொதுமக்களுக்குத் தெரிவிக்க வேண்டும் என்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. அதன்படி, வேட்பாளர் ஆ. ரகு சமர்ப்பித்துள்ள விவரங்கள் வருமாறு:

வேட்பாளர் விவரம்:

அரியங்குப்பம், ஆர்.கே. நகர், திரௌபதியம்மன் வீதியைச் சேர்ந்த ஆ. ரகு, இத்தேர்தலில் சுயேச்சையாகப் போட்டியிடுகிறார்.

நிலுவையில் உள்ள வழக்குகள்:

வழக்கு எண் 76/2025: புதுச்சேரி ஒருங்கிணைந்த நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள இவ்வழக்கு, அரசுப் பணிக்கு இடையூறு விளைவித்தல் தொடர்பாக 189(2), 296, 132 உள்ளிட்ட பல்வேறு பி.என்.எஸ் (BNS) பிரிவுகளின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

வழக்கு எண் 192/2024: நிர்வாக நடுவர் (Executive Magistrate) முன்னிலையில் நிலுவையில் உள்ள இவ்வழக்கு, தனது வீட்டை அரசு இடித்த போது அதனைத் தடுத்தது மற்றும் ஜீவ சமாதி போராட்டம், குடியேறும் போராட்டம் நடத்தியது தொடர்பாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

தண்டனை விவரம்:

வேட்பாளர் ஆ. ரகு மீது இதுவரை எந்தவொரு வழக்கிலும் நீதிமன்றத்தால் தண்டனை வழங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

தேர்தல் ஆணையத்தின் உத்தரவுப்படி, வாக்காளர்கள் வேட்பாளரின் பின்னணியைத் தெரிந்து கொண்டு வாக்களிக்க ஏதுவாக இந்த விவரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

இந்தத் தகவல்கள் வேட்புமனுத் தாக்கலின் போது சமர்ப்பிக்கப்பட்ட பிரமாணப் பத்திரத்திலும் (Affidavit) இடம்பெற்றுள்ளன.

## அதிமுகவில் 127 வேட்பாளர்கள் அறிவிப்பு: 2ம் கட்ட முழு பட்டியல்

சென்னை: மார்ச்.28–

சட்டப்பேரவைத் தேர்தலில் அதிமுக சார்பில் போட்டியிடும் 2ம் கட்ட வேட்பாளர்கள் பட்டியலை அக்கட்சியின் பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி வெளியிட்டுள்ளார். அதில், 127 தொகுதிகளுக்கான வேட்பாளர்கள் இடம்பெற்றுள்ளனர்.

தமிழகத்தில் சட்டப்பேரவைத் தேர்தல் ஏப்.23ஆம் தேதி நடைபெறவிருக்கும் நிலையில், அதிமுக தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணியில் பாஜக 27 தொகுதிகளில், பாமக 18 தொகுதிகளிலும், அமமுக 11 தொகுதிகளிலும், தமாகா 5 தொகுதிகளும் போட்டியிடுகின்றன.

அதிமுகவின் சார்பில் ஏற்கெனவே 23 பேர் கொண்ட முதற்கட்ட வேட்பாளர்கள் பட்டியல் வெளியிடப்பட்டுள்ள நிலையில், தற்போது 127 தொகுதிகள் அடங்கிய 2ம் கட்ட வேட்பாளர்களின் பட்டியலை அக்கட்சியில் பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி அறிவித்துள்ளார். அதன் விவரம்:

1. கும்மிடிபூண்டி (1) V. சுதாகர், 2. பொன்னேரி (தனி) (2) சிறுணியம் P. பலராமன்,3. திருத்தணி (3) திருத்தணி கோ. அரி,4. திருவள்ளூர் (4) B.V. ரமணா,5. மாதவரம் (9) மாதவரம் V. மூர்த்தி,,6. திருவொற்றியூர் (10) K. குப்பன், 7. ஸ்ரீபெரும்புதூர் (தனி) (29) K. பழனி,8. தாம்பரம் (31) சிட்லபாக்கம் ச. இராசேந்திரன்..9. செங்கல்பட்டு (32) M. கஜா (எ) கஜேந்திரன்..10. செய்யூர் (தனி) (34) E. ராஜசேகர்,11. மதுராந்தகம் (தனி) (35) மரகதம் குமரவேல்,12. காஞ்சிபுரம் (37) V. சோமசுந்தரம்,13. அரக்கோணம் (தனி) (38) சு. ரவி, 14. காட்பாடி (40) V. ராமு, 15. ஆற்காடு (42) S.M சுகுமார், 16. வேலூர் (43) S.R.K அப்பு,17. அணைக்கட்டு (44) த. வேலழகன், 18. குடியாத்தம் (தனி) (46) G. பரிதா புருஷோத்தமன்,

19. வாணியம்பாடி (47) G. செந்தில்குமார், 20. ஆம்பூர் (48) R. வெங்கடேசன், 21. ஊத்தங்கரை (தனி) (51) - T.M. தமிழ்செல்வம், 22. பர்கூர் (52) ணி.சி. கோவிந்தராசன், 23. கிருஷ்ணகிரி (53) K. அசோக்குமார், 24. ஓசூர் (55) P. பாலகிருஷ்ண ரெட்டி, 25. பாப்பிரெட்டிபட்டி (60) மரகதம் வெற்றிவேல், 26. அரூர் (தனி) (61) V. சம்பத்குமார், 27. செங்கம் (தனி) (62) T.S. வேலு, 28. கீழ்பென்னாத்தூர் (64) எஸ். இராமச்சந்திரன், 29. ஆரணி (67) L. ஜெயசுதா, 30. செய்யார் (68) முக்கூர் N. சுப்பிரமணியன், 31. வந்தவாசி (தனி) (69) - P. ராணி, 32. திண்டிவனம் (தனி) (72) - P. அர்ஜுனன், 33. வானூர் (தனி) (73) P. முருகன், 34. விழுப்புரம் (74) K. விஜயா,35. திருக்கோயிலூர் (76) S. பழனிசாமி, 36. உளுந்தூர்பேட்டை (77) இரா. குமரகுரு 37. சங்கராபுரம் (79) R. ராகேஷ், 38. கள்ளக்குறிச்சி (தனி) (80) ராஜீவ்காந்தி, 39. கங்கவல்லி (தனி) (81) A. நல்லதம்பி,40. ஆத்தூர் (தனி) (82) A.P. ஜெயசங்கரன்,41. ஏற்காடு (எஸ்டி) (83) P. உஷாராணி, 42. ஓமலூர் (84) R. மணி, 43. மேட்டூர் (85) G. வெங்கடாஜலம், 44. சங்ககிரி (87) S. வெற்றிவேல், 45. சேலம் (தெற்கு) (90) J. வினோத், 46. வீரபாண்டி (91) டாக்டர் ஸ்ரீ பாலாஜி சுகுமார், 47. சேந்தமங்கலம் (எஸ்டி) (93) C. சந்திரசேகரன், 48. நாமக்கல் (94) ஸ்ரீதேவி P.S. மோகன், 49. பரமத்தி வேலூர் (95) S.சேகர், 50. திருச்செங்கோடு (96) R. சந்திரசேகர், 51. ஈரோடு (கிழக்கு) (98) R.மனோகரன், 52. தாராபுரம் (தனி) (101) P. சத்தியபாமா, 53. காங்கயம் (102) N.S.N. நடராஜ், 54. பெருந்துறை (103) J.K (எ) S. ஜெயக்குமார், 55. அந்தியூர் (105) P. ஹரிபாஸ்கர், 56. கோபிச்செட்டிப் பாளையம் (106) V.B. பிரபு,

57. பவானிசாகர் (தனி) (107) A. பண்ணாரி, 58. கூடலூர் (தனி) (109) பொன். ஜெயசீலன், 59. குன்னூர் (110) -A. ராமு, 60. மேட்டுப்பாளையம் (111) O.K. சின்னராஜ், 61. திருப்பூர் (வடக்கு) (113) M.S.M. ஆனந்தன், 62. பல்லடம் (115) பல்லடம் K.P. பரமசிவம், 63. சூலூர் (116) -V.P. கந்தசாமி, 64. கவுண்டம்பாளையம் (117) P.R.S. அருண்குமார், 65. கோயம்புத்தூர் தெற்கு (120) அம்மன் K. அர்ச்சுணன், 66. சிங்காநல்லூர் (121) K.R. ஜெயராம், 67. கிணத்துக்கடவு (122) செ. தாமோதரன், 68. பொள்ளாச்சி (123) V. பொள்ளாச்சி ஜெயராமன், 69. வால்பாறை (தனி) (124) D. லட்சுமண சிங், 70. உடுமலைப்பேட்டை (125) உடுமலை K. ராதாகிருஷ்ணன், 71. பழனி (127) K. ரவி மனோகரன், 72. ஆத்தூர் (129) A. விஸ்வநாதன், 73. நிலக்கோட்டை (தனி) (130) S. தேன்மொழி, 74. வேடசந்தூர் (133) V.P.B. பரமசிவம், 75. அரவக்குறிச்சி (134) K. செல்வக்குமார், 76. கிருஷ்ணராயபுரம் (தனி) (136) S. திவ்யா, 77. குளித்தலை (137) S. கருணாகரன்,78. மணப்பாறை (138) P.L. விஜயகுமார்,79. ஸ்ரீரங்கம் (139) R. மனோகரன்,80. திருச்சிராப்பள்ளி (கிழக்கு) (141) க. ராஜசேகரன்,81. திருவெறும்பூர் (142) ப. குமார்,82. லால்குடி (143) M. லீமா ரோஸ்,83. முசிறி (145) N. யோகநாதன்,84. துறையூர் (தனி) (146) இ. சுரோஜா,85. பெரம்பலூர் (தனி) (147) இளம்பை இரா. தமிழ்ச்செல்வன்,6. நெய்வேலி (153) சொரத்தூர் இரா. ராஜேந்திரன்,87. பண்ருட்டி (154) K. மோகன்,88. கடலூர் (155) M.C. சம்பத்,89. குறிஞ்சிப்பாடி (156) A. புவனேந்திரன்,90. புவனகிரி (157) ஆ. அருண்மொழிதேவன்,91. சிதம்பரம் (158) K.A. பாண்டியன்,92.சீர்காழி (தனி) (160) ம. சக்தி,93. பூம்புகார் (162) S. பவுன்ராஜ்,94. நாகப்பட்டினம் (163) தங்க. கதிரவன் 95. திருத்துறைப்பூண்டி (தனி) (166) உ. பாலதண்டாயுதம்,96. திருவிடைமருதூர் (தனி) (170) இளமதி சுப்ரமணியன்,97. பாபநாசம் (172) D. சண்முகபிரபு,98. ஒரத்தநாடு (175) M. சேகர்,99. பட்டுக்கோட்டை (176) C.V. சேகர்,100. பேராவூரணி (177) கோவி. இளங்கோ,101. திருமயம் (181) P.K. வைரமுத்து,102. சிவகங்கை (186) P.R. செந்தில்நாதன்,103. மேலூர் (188) - P. பெரியபுள்ளான் (எ) செல்வம்,104. மதுரை கிழக்கு (189) மாங்குளம் K. மகேந்திரன்,105. சோழவந்தான் (தனி) (190) A. மாணிக்கம்,,106. மதுரை வடக்கு (191) P. சரவணன்,107. உசிலம்பட்டி (197) I. மகேந்திரன்,108. ஆண்டிபட்டி (198) A. லோகிராஜன்,,109. போடிநாயக்கனூர் (200) V.T. நாராயணசாமி, 110. கம்பம் (201) S.T.K. ஜக்கையன், 111. ஸ்ரீவில்லிபுத்தூர் (தனி) (203) M. சந்திரபிரபா, 112. விருதுநகர் (206) V.G.கணேசன், 113. அருப்புக்கோட்டை (207) -S. சேதுபதி, 114. பரமக்குடி (தனி) (209) S. முத்தையா, 115. திருவாடானை (210) கீர்த்திகா முனியசாமி, 116. முதுகுளத்தூர் (212) மலேசியா S. பாண்டி, 117. விளாத்திகுளம் (213) R.சத்யா, 118. தூத்துக்குடி (214) சி.த. செல்லப்பாண்டியன், 119. ஸ்ரீவைகுண்டம் (216) S.P. சண்முகநாதன், 120. சங்கரன்கோவில் (தனி) (219) திலிபன் ஜெய்சங்கர், 121. கடையநல்லூர் (221) C. கிருஷ்ணமுரளி, 122. தென்காசி (222) S. செல்வமோகன்தாஸ், 123. ஆலங்குளம் (223) K.R.P. பிரபாகரன், 124. திருநெல்வேலி (224) தச்சை N. கணேசராஜா, 125. அம்பாசமுத்திரம் (225) இசக்கி சுப்பையா (எ) இ. சுப்பையா,126. பாளையங்கோட்டை (226) S. சையது சுல்தான் சம்சுதீன்,127. கன்னியாகுமரி (229) என். தளவாய்சுந்தரம்.

## தேசிய அளவு தேர்வில் வெற்றி: 8 ஆம் வகுப்பு மாணவனுக்கு பாராட்டு



வந்தவாசி , மார்ச் 28:

திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி அடுத்த கண்டவராட்டி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் 56 மாணவர்கள் படிக்கின்றனர்.

இதில் 8 ஆம் வகுப்பில் மட்டும் 7 மாணவ, மாணவிகள் பயிலுகின்றனர். இவர்கள் அனைவரும் வந்தவாசி சன்னதி மேல்நிலைப் பள்ளியில் கடந்த ஜனவரி மாதம் நடைபெற்ற தேசிய வருவாய் வழி திறன் உதவித்தொகை தேர்வில் கலந்து கொண்டனர்.

நாடு முழுவதும் நடைபெற்ற இந்த தேர்வில் இப்பள்ளியின் மாணவன் த.செந்தமிழன் வெற்றி பெற்று 9 ஆம் வகுப்பு முதல் பிளஸ் டூ வரை மாதம் தோறும் மத்திய அரசு வழங்கும் ரூபாய் 1000 உதவித் தொகையை பெற உள்ளார். பள்ளிக்கு பெருமை சேர்த்த மாணவனுக்கு நடைபெற்ற பாராட்டு விழாவில் பள்ளி தலைமை ஆசிரியர் ப.சக்கரவர்த்தி, ஸ்ரீ கிருஷ்ணா கல்வி மைய முதல்வர் பா.சீனிவாசன், ஆசிரியர்கள் வெ.துரைராஜன், இரா. செல்வகுமார், கோ.ரேக்கா, து.ரேவதி, ம.தினேஷ் பி.குணலட்சுமி, அ.இலங்கையம்மாள் ஆகியோர் பங்கேற்று வாழ்த்துரை வழங்கினர். முன்னதாக மாணவர்களுக்கான பல்திறன் போட்டிகள் நடத்தப்பட்டு பரிசுகள் வழங்கப்பட்டது. சத்துணவு அமைப்பாளர் சரளா நன்றி கூறினார்.

Published by K.SABIULLA,printed by K.SABIULLA, on behalf of K.SABIULLA, printed at BEAUTIFUL printers 6/1 devaraja Street,Triplicane chennai 600005.
puplished at 378/46.10th cross,Rajevnagar,manaparai trichy(dis) editor:K.SABIULLA, cell.78100-68421